கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

றாம் வருடம் முதலாம் அரையாண்டு சிறப்புக்கலைமாணித்தேர்வு -2015/2016

2013/2014 Batch -January /February -2018

ECS 3113 International Economics

: 03 மணித்தியாலங்கள்

ஒன்றில் இரண்டு வினாக்களுக்கும், பகுதி இரண்டில் மூன்று
க்களுக்கும் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடைதருக.

பகுதி I

அ. சர்வதேச வர்த்தகத்தின் மூலம் ஒரு நாடு எதிர்நோக்கும் விளைவுகளை விளக்குவதோடு, அது தோன்றுவதற்கு ஏதுவான காரணிகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ. ஒப்பீட்டுநன்மைக் கோட்பாடு என்பதை ஓர் உதாரணம் மூலம் விளக்கி, அதன் எடுகோள்களைக் குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

ஓரலகு உள்ளீட்டைப் பயன்படுத்தி இலங்கையும் இந்தியாவும் கோதுமை மற்றும் துணி உற்பத்திகளில் ஈடுபடுமாயின் அவ்விரு நாடுகளும் பெறத்தக்க உற்பத்தியளவுகள் வருமாறு,

| பொருள் | இலங்கை | இந்தியா |
|---|---|---|
| கோதுமை(KG) | 10 | 5 |
| துணி(M) | 6 | 10 |

அ. கோதுமை துணி உற்பத்திகளில் முழுநன்மை மற்றும் ஒப்பீட்டுநன்மையைக் கொண்ட நாடுகள் எவை? ஏன்?

(05புள்ளிகள்)

ஆ. இவ்விரு பொருட்கள் சார்பாகவும் இரு நாடுகளிலும் உள்நாட்டு மற்றும் சர்வதேசப் பரிமாற்று வீதங்களைக் காண்க.

(05புள்ளிகள்)

இ. இவ்விரு நாடுகளிலும் தலா 100 அலகு உள்ளீடுகள் இருப்பதாகவும் அவை அதில் அரைப்பங்கினை கோதுமை, துணி உற்பத்திகளில் பயன்படுத்தின், பெறக்கூடிய உற்பத்தி நுகர்வு மட்டங்களை அட்டவணை மற்றும் வரையில் காட்டுக.

(05புள்ளிகள்)

ஈ. இவ்விரு நாடுகளும் சிறப்புத்தேர்ச்சியினடிப்படையில் உற்பத்தி மற்றும் வர்த்தகத்தில் ஈடுபடும் போது உலக உற்பத்தி அதிகரிப்பதையும் நுகர்வு மட்டம் சாத்தியவளையிக்கு வலப்புறம் அமைவதையும் அட்டவணை மற்றும் வரையில் காட்டுக. (பரிமாற்றவிகிதம் 500 கோதுமைக்கு 500 துணி எனக் கருதுக.)

(05புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

03. அ. கெக்ஸர் ஒகலின் (Hechscher- Ohalin) கோட்பாட்டின் எடுகோள்களைக் குறிப்பிட்டு விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ. மேற்படி கோட்பாட்டில் காரணிச்செறிவு (factor intensity) காரணிக்கிடைப்பனவு (factor abundance) என்பவற்றை வரைபடம் மற்றும் சமன்பாடுகளைப் பயன்படுத்தி விளக்குக.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

## பகுதி II

4. நாணயமாற்றுவீதம் என்பதை வரையறை செய்து, அதன் வகைகளை விளக்கி, சுதந்திரமாக மிதக்கும் நாணயமாற்றுவீதத்தின் சாதக மற்றும் பாதாக விளைவுகளை ஆராய்க.

(மொத்தம் 20 புள்ளிகள்)

5. உலகவங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் என்பவற்றினால் வளர்முக நாடுகளில் மேற்கொள்ளப்படும் பொருளாதார உதவிகளை பட்டியலிடுவதோடு அது தொடர்பான உமது விமர்சனங்களையும் முன்வைக்குக.

(மொத்தம் 20 புள்ளிகள்)

6. சர்வதேச மூலதனத்தின் மூலம் ஒருநாடு பெற்றுக்கொள்ளும் அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்களை விளக்குவதோடு, அது தொடர்பான உமது விமர்சனங்களை முன்வைக்குக.

(மொத்தம் 20 புள்ளிகள்)

7. சர்வதேச வர்த்தகக்கோட்பாடுகளான முழுநன்மைக்கோட்பாடு, ஒப்பீட்டு நன்மைக்கோட்பாடு, நியமக்கோட்பாடு, கெக்சர் ஒகலின் கோட்பாடுமுதலியன வர்த்தகத்திற்காகச் கூறும் அடிப்படைகளை விளக்குவதோடு, அவை ஒன்றிலிருந்து ஒன்று எவ்வாறு வேறுபடுகிறது என்பதையும் ஆராய்க.

(மொத்தம் 20 புள்ளிகள்)